## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (15.01.2016 முதல் 19.01.2016)

*அறிக்கை எண் 005/2016* *தேதி: 14.01.2016*

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 31°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 19°செ முதல் 23°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 7°செ முதல் 10°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் வறண்ட வானிலையே காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (15.01..2016 முதல் 19.01.2016)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 84 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 42 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15-01-16 | 0 | 30 | 19 | 3 | 84 | 42 | 8 | வட கிழக்கு |
| 16-01-16 | 0 | 30 | 19 | 3 | 84 | 42 | 8 | வட கிழக்கு |
| 17-01-16 | 0 | 30 | 19 | 3 | 84 | 42 | 8 | வட கிழக்கு |
| 18-01-16 | 0 | 30 | 19 | 3 | 84 | 42 | 8 | வட கிழக்கு |
| 19-01-16 | 0 | 30 | 19 | 3 | 84 | 42 | 8 | வட கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் பயிரிடப்பட்டுள்ள நெல், மக்காச்சோளம், மற்றும் பயிர் வகை பயிர்களை அறுவடை செய்யவும். அறுவடை முடிந்த பிறகு நன்கு காய வைத்து ஈரத்தன்மை 12 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைக்கவும்.
- ✓ கடந்த 20 நாட்களாக வறண்ட வானிலை நிலவுவதால் பயிர்களில் பச்சையத்தை நிலைநிறுத்த மெத்தைலோ பாக்டீரியா (PPFM) 200 மில்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும்.
- ✓ அதிக ஈரப்பதம் மற்றும் குறைந்த வெப்பநிலை நிலவுவதால் மாவில் கரும்பூஞ்சாண நோய் வர வாய்ப்புள்ளது. இதை தவிர்க்க 1 லிட்டர் தண்ணீரில் பாஸ்போமிடான் (phosphamidon) 2 மில்லி மற்றும் 5 சதவீதம் மைதாவுடன் கலந்து தெளிக்கவும்.
- ✓ நிலவும் குறைந்த வெப்பநிலையால் கால்நடைகள் குறைந்த அளவு தண்ணீர் உட்கொள்ளும். இதை அவ்வப்பொழுது கவனித்து போதுமான அளவு சுத்தமான தண்ணீர் கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ நிலவும் வானிலையால் மாவில் கரும்பூஞ்சாண நோய் வர வாய்ப்புள்ளது. இதை தவிர்க்க 1 லி தண்ணீரில் பாஸ்போமிடான் 2 மி.லி மற்றும் 5% மைதாவுடன் கலந்து தெளிக்கவும்.

**SD/-**
**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**